தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து இரண்டாவது அறிக்கை

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் (போக்குவரத்து) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் பள்ளிக்கல்வித் துறை

(பொதுப் பட்டியல்)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: - 6 MAY 2008

- 6 MAY 2008

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து இரண்டாவது அறிக்கை



பொதுப் பட்டியல்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

		பக்கங்கள்
குழுவின் அமைப்பு	..	iii

அறிக்கை

1. முகவுரை	..	v
2. குழுவின் கூட்டங்கள்	..	v
3. பொதுக் குறிப்புரைகள்	..	vii

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

(பொதுப் பட்டியல்)

1. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	..	1–30
2. நெடுஞ்சாலைத் துறை	..	33–47
3. உள் (போக்குவரத்து) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை		51–55
4. போக்குவரத்துத் துறை	..	59–84
5. பள்ளிக்கல்வித் துறை	..	87–134

இணைப்பு–2

2. குழுவின் பரிந்துரை	..	135–136

இணைப்பு–3

3. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	137

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (லால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	:	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	:	துணைச் செயலாளர்
திரு. க. பாலசுப்ரமணியன்	:	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்து இரண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் சென்னை–2 ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலுள்ள குழுக்கூட்ட அறையில் கூடியது.

3. மேற்படி குழுக் கூட்டத்தில் சுற்றுசூழல் மற்றும் வனத்துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் (போக்குவரத்து) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை போக்குவரத்து மற்றும் பள்ளிக்கல்வித் துறைகளின் அரசுச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் குழு கலந்துரையாடி பேரவையில் மாண்புமிகு அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற சுற்றுசூழல் மற்றும் வனத்துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் (போக்குவரத்து) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை போக்குவரத்து மற்றும் பள்ளிக்கல்வித் துறைகள் தொடர்பான 209 உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய பதிலறிக்கைகளை ஆராய்ந்து அவற்றில் 89 உறுதிமொழிகள் நிறைவேற்றப் பெற்றதாகவும், 15 உறுதிமொழிகள் படித்து பதிவு செய்யப்பட்டனவாகவும், 1 உறுதிமொழி பரிந்துரை செய்யப்பட்டதாகவும், எஞ்சியுள்ள 104 உறுதிமொழிகளை நிலுவையில் வைத்து பிறிதொரு நாளில் ஆய்வு செய்யலாம் எனவும் குழு முடிவு செய்துள்ளது.

4. மேற்சொன்ன கூட்டங்களில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழுவின் பரிந்துரை இணைப்பு–2 இல் உள்ளது. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–3–இல் உள்ளன.

பொதுக் குறிப்புரை

5. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

6. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009.
29, ஏப்ரல் 2008,
சித்திரை, 17,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்
தலைவர்
அரசு உறுதிமொழிக் குழு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

இணைப்பு – 1

வன ஒய்வு இல்லங்கள் கட்டுவது குறித்து.

வரிசை எண்.	1
துறையின் பெயர்	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
உறுதிமொழி எண்.	478 / 1998
பொருள்	வன ஒய்வு இல்லங்கள் கட்டுவது குறித்து.
காட்டுவளத்துறை மற்றும் காட்டுவள மூலதனச் செலவுப் பற்றிய மானியக் கோரிக்கை மீது அமைச்சரின் பதிலுரை	
நாள்	19.05.1998
உறுப்பினர் பெயர்	–
மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்.
	...6 இடங்களில் வன இல்லங்கள் கட்டப்படும்
துறையின் பதில்	அரசு ஆணை (நிலை) எண்.250, சுற்றச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்:28.08.1998–ல் ரூ.49.80 இலட்சம் செலவில் ஆறு வன ஒய்வு இல்லங்கள், தேனி, சென்னை, இராமேசுவரம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் கட்ட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
குழு ஆய்வு செய்த நாள்	30.10.2007
குழுவின் கருத்து	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வனத்துறைக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தனியாரிடம் இருப்பதை கண்டறிந்து முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

வரிசை எண்.	2
துறையின் பெயர்	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
உறுதிமொழி எண்.	26 / 1999
பொருள்	வனத்துறைக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தனியாரிடம் இருப்பதை கண்டறிந்து முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
உடுக்குறியிட்ட வினா துணை வினா	1995
நாள்	23.02.1999
உறுப்பினர் பெயர்	திரு பா.மு. முபாரக்
மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர்.
	...உறுப்பினருடைய எண்ணத்தை இந்த அரசு தீவிரமாக பரிசீலிக்கும்
துறையின் பதில்	வனப்பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி வன நிலங்களை வனமில்லாத பணிகளுக்கு மாற்ற மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் உச்சநீதிமன்ற வழக்கு எண்.202/95–ல் ஐ.ஏ.எண்.418/99, நாள்:07.05.1999–ன்படி வன நிலங்களுக்கு பட்டா வழங்கவோ மற்றும் ஆக்கிரமிப்பு வரன்முறை செய்யவோ கூடாது என உத்தரவு வழங்கியுள்ளது. எனவே, உச்சநீதிமன்ற உத்தரவின்படி தனியார் ஆக்கிரமிப்பில் இருக்கும் வன நிலங்களை முறைப்படுத்த இயலாது.
குழு ஆய்வு செய்த நாள்	30.10.2007
குழுவின் கருத்து	படித்துப் பதிவு செய்யப்பெற்றது.

தமிழகத்தில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வனப் பள்ளிகளைக் கல்வித்துறையின் கீழ் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	3
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	379 / 1999
4.	பொருள்	:	தமிழகத்தில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் வனப் பள்ளிகளைக் கல்வித்துறையின் கீழ் கொண்டுவர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	21595
	நாள்	:	05.05.99
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஆர். சக்கரபாணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர். ... கருத்துரு பெறப்பட்டுள்ளது. அரசின் பரிசீலனையில் உள்ளது
8.	துறையின் பதில்	:	வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வனத்துறைக்கு உட்பட்ட மொத்தம் 18 பள்ளிகள் மலைவாழ் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையினரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வனத்துறையைச் சார்ந்த மலைப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. வனத்துறை நடத்தும் இப்பள்ளிகளின் நிருவாகம் பற்றி எந்த மாற்றமும் தேவையில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்து, இப்பள்ளிகளின் நிர்வாகம் வனத்துறையின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இயங்கி வரலாம் என அரசாணை (நிலை) எண்.23, சுற்றுப்புறம் மற்றும் வனம், நாள்: 07.02.2000–ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வனவிலங்குகளுக்கு காடுகளிலே குடி தண்ணீர் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து.

. வரிசை எண்.	:	4
2. துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3. உறுதிமொழி எண்.	:	342 / 2002
4. பொருள்	:	வனவிலங்குகளுக்கு காடுகளிலே குடி தண்ணீர் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து.
5. உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	19864
நாள்	:	08.05.2002
6. உறுப்பினர் பெயர்	:	திரு.ஜே. ஹேமச்சந்திரன்
7. மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.
		... வனப் பகுதியிலே தடுப்பணைகள் கட்டி, வனத்துறையின் மூலமாக குட்டைகள் வெட்டப்பட்டு தண்ணீர் நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.
8. துறையின் பதில்	:	அரசு ஆணை எண்.176, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள்: 16.05.2005-ல் மாநில அரசுத் திட்டம் (பகுதி-2)-ன் கீழ் ரூ.30.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றினை 14 கோட்டங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டு ஆழ்குழாய் கிணறு மற்றும் நீர்த்தொட்டிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது. அவை பின்வருமாறு:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	கோட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின் விபரம் (ரூபாய் லட்சத்தில்)
1.	வேலூர்	0.50
2.	திருவண்ணாமலை	0.50
3.	திருப்பத்தூர்	0.50
4.	ஈரோடு	3.00
5.	சத்தியமங்கலம்	4.50
6	திண்டுக்கல்	1.875
7.	கொடைக்கானல்	1.875
8.	மதுரை	1.75
9.	தேனி	2.00
10.	திருநெல்வேலி	4.50
11.	தர்மபுரி	2.00
12.	ஓசூர்	2.00
13.	கள்ளக்குறிச்சி	2.00
14.	சிவகங்கை	3.00

மேலும் 2005–ஆம் ஆண்டு நல்ல மழை பெய்துள்ளதைபடுத்து வனப்பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்களில் போதுமான அளவுக்கு தண்ணீர் உள்ளதால் ஆழ்குழாய் கிணறு மூலம் நீரினை மேலே ஏற்றி நீர்த் தொட்டிகளில் சேகரித்து வன விலங்குகள் நீர் அருந்துவதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டில் தண்ணீர் இருக்கக்கூடிய நீர் பிடிப்பு ஏரிகளிலே விஸ்திரமாக உள்ள இடங்களிலே சமூக காடு, வளர்ப்பு திட்டத்தின் மூலம் பல மரங்கள் நட்டு ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	5
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	352 / 2003
4.	பொருள்	:	தமிழ்நாட்டில் தண்ணீர் இருக்கக்கூடிய நீர் பிடிப்பு ஏரிகளிலே விஸ்திரமாக உள்ள இடங்களிலே சமூக காடு, வளர்ப்பு திட்டத்தின் மூலம் பல மரங்கள் நட்டு ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	17791
	துணை வினா		
	நாள்	:	25.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.கோ. இரவிராஜ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ பன்னீர் செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர். ... அத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது
8.	துறைச் செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளுடன் குழு நேரிடையாக கலந்துரையாடிய விவரம்	:	**முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்:** 3500 ஹெக்டேர் பரப்பளவிலே 350 இலட்சம் ரூபாய் செலவில் ஏரி மற்றும் குளங்களின் மேல் பகுதியில் நடவு செய்து இருக்கிறோம். **தலைவர்:** 2003-2004-லே ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 40 இலட்சம் பல்வகை மரக் கன்றுகள் தமிழ்நாட்டில் 3500 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.350 இலட்சம் செலவில் ஏரி மற்றும் குளங்களின் மேல் பகுதியில் நடவு செய்யப்பட்டதாக சொல்லி இருக்கிறீர்கள். இவற்றை துறையே செய்கிறீர்களா அல்லது கான்ட்ராக்ட் விட்டு செய்கிறீர்களா? **முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்:** துறையே செய்கிறோம். **தலைவர்:** உங்களிடம் இதற்குத் தேவையான ஊழியர்கள் இருக்கிறார்களா?

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்: 3500 ஹெக்டேர் நடவு செய்வதற்கு ஊழியர்கள் இருக்கிறார்கள். மேலும் பெட்டி கான்ட்ராக்ட் விட்டு அவர்களது மேற்பார்வையில் நாற்றைக் கொண்டுபோய் நடுவதற்கு ஏற்பாடு செய்கிறோம். இதற்கு ப்ரொவிஷன் தனியாகக் கொடுத்திருக்கிறார்கள்.

திருமதி ஜி. லதா: வனப் பகுதியைச் சார்ந்த கிராம மக்கள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கிறார்கள். ஒரு சில இடங்களில் சுய உதவிக் குழுக்கள் இருந்தும் மரக் கன்றுகள் நடுகின்ற பணியை குழுக்களிடம் கொடுக்காமல் வேறு சிலருக்குக் கொடுக்கிறார்கள். வனப் பகுதியைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் அந்தக் குழுக்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சிகள் அளிக்கப்பட்ட பிறகு மரக் கன்றுகள் நடக்கூடிய பணிகளை அக்குழு பெண்களுக்கு கொடுக்கலாம். என்னுடைய குடியாத்தம் பகுதியிலே நிறைய இடங்களில் வனத் துறை சுய உதவிக் குழு பெண்களுக்கு பணிகளைத் தருவது இல்லை. யார் குறைவாக கூலி வாங்குகிறார்களோ அவர்களுக்கு கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதேபோல சில பகுதிகளில் நடக்கிறது. கன்றுகள் நடும்போது அதற்கு முந்தைய பயிற்சி கொடுக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்களுக்கு முழுமையாக அளிக்க வேண்டும் என்று கான்செப்ட் இருக்கிறது. அது நடைமுறையிலே இருப்பதில்லை. அதைப் போக்குவதற்கான சூழ்நிலை உருவாக்க வேண்டும்.

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்: இது போன்ற பிரச்சினைகள் எங்கள் கவனத்திற்கு வந்தது. நாற்றங்கால் நடும் பணிகள் பெண்களால் செய்ய முடிகிறது. அவர்கள் தேவையை நாங்கள் முழுமையாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். தோட்டங்களில் சிறிய கால அளவில் நடவுப் பணியை செய்ய வேண்டும். அதை எல்லோரையும் வைத்து பண்ண முடியவில்லை. சிறிய கால அளவில் அவர்களால் நடவுப் பணியை செய்ய முடியாது. மேலும் பயிர்கள் தரம் குறையும் வாய்ப்பும் இருக்கிறது. கிராமங்களில் பெண்களைப் பயன்படுத்தி பணிகளைச் செய்ய வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. கூடுமான வரையில் பெண்களையே ஈடுபடுத்தி பணிகளைச் செய்கிறோம். சுய உதவிக் குழு பெண்களைப் பயன்படுத்தி நாற்றங்கால் நடவு செய்கிறோம். ப்ளான்டேஷனைப் பொறுத்த வரையில் சிறிய கால அளவில் செய்ய வேண்டும். அதை மனதில் வைத்து சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி

கொடுத்து தோட்டப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு முழு முயற்சி எடுக்கிறோம்.

தலைவர்: ஏரி மற்றும் குளக் கரைகளிலே கருவேல மரங்களை நடுகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அவ்வாறு எல்லா இடங்களிலும் நடக்கிறீர்களா?

அரசுச் செயலாளர்: கருவேல மரங்களைத் தொடர்ந்து நட்டுக்கொண்டு வருகிறோம். சென்ற ஆண்டு கருவேல மரங்களை சில பகுதிகளில் ஏரிக் கரைகளில் நட்டிருக்கிறோம். கருவேல மரங்களை நடுவதன் மூலமாக சில பிரச்சினைகள் வருவதாக சொல்லி இருக்கிறார்கள். உலக வங்கியின் IAMWARM திட்டத்தின் மூலமாக ஏரிகள் மற்றும் குளங்களை ஆழப்படுத்துவதற்கான பணிகளை எடுக்கிறார்கள். அப்போது நடப்பட்ட கருவேல மரங்களை வெட்டி வெளியேற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதால் இதுபோன்ற இடங்களில் நட வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள். கருவேல மரங்கள் நடுவதன் மூலமாக மக்களுக்கு பயன் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்க முடியும். பொதுப்பணித் துறை அவர்களது வேலைகளை ஏரிகளில் செய்ய முடியவில்லை என்பது அவர்கள் கருத்து.

தலைவர்: குறைந்தபட்ச செலவுத் திட்டத்தின்கீழ் மரங்களை பயிரிடும் முறையிலே எந்த மரங்களை நட்டால் இலாபமாக இருக்கும் என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும். ஏனெனில் கருவேல மரங்களை பயிரிடுவதால் நிறைய எடைகள் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. மேலும், கருவேல மரங்கள் தண்ணீரை அதிகம் உறிஞ்சாத தன்மை உடையது. இவைகளை நீங்கள் உங்களுடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் வேறு முள் மரங்களை நடும்போது அதனால் லாபம் ஏற்படுகிற வாய்ப்பு குறைவாக இருக்கிறது. மேலும் கருவேல மரங்களை வளர்ப்பதனால் வேறு மரங்களைப்போல் இதற்கு பராமரிப்பு தேவையில்லை. ஆகவே, இதில் எது லாபகரமானதோ அதில் நாம் ஈடுபட வேண்டும். சுற்றுப்புற சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையைப் பொறுத்தவரையில் இதில் பாதிப்பு ஏற்படாத நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். எனவே, அரசுச் செயலாளர் அவர்கள் இதுகுறித்து யோசித்து செய்ய வேண்டும்.

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்: சமூகக் காடுவளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஏரிகளில் மரச் செடிகள் வளர்ப்பதற்கு காரணம் என்னவென்றால் தண்ணீர் தேங்குவதை அதிகமாக ஆவியாவதை

தடுக்க வேண்டும் என்பதுதான். மேலும், கருவேல மரங்கள் அதிகமாக தண்ணீரை உறிஞ்சாது. கருவேல மரம் 10 வருடங்கள் வரை இருக்கக்கூடியது. இதனால் ஒரு முறை வெட்டினாலும் அது தானாகவே 3 முறை வளரக்கூடியது.

தலைவர்: எனவே, இதற்கு அதிகம் செலவு இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள் இல்லையா?

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்: ஆம், மேலும் அங்கு மரங்கள் நடப்படுவதால் மண் வளம் பெறுகிறது. இந்த மண்ணை விவசாயத்திற்கு பயன்படுத்தலாம்.

தலைவர்: முள் மரங்கள் வளர்ப்பதினால் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படுகிறதா?

தலைமை வனப் பாதுகாவலர்: முள் மரங்கள் அல்லது கருவேல மரங்கள் வளர்ப்பதற்கும் நிலத்தடி நீர் பாதிக்கும் சம்பந்தம் இல்லை.

கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி மற்றும் வனச் செயல் திட்டம்) : ஏரி, குளங்களில் மற்ற முள் மரங்களை வளர்த்தால், அவைகளில் 2 அல்லது 3 மாதங்கள் தொடர்ந்து தண்ணீர் தேங்கியிருந்தால் அந்த மரங்கள் இறந்துவிடும். ஆனால், கருவேல மரம் மட்டும்தான் 2 மாதங்கள் தண்ணீர் தேங்கியிருந்தாலும் வாழும் தன்மையுடையது. இது சம்பந்தமாக ஒரு கமிட்டி கூட அமைத்தார்கள். அதிலே கருவேல மரங்களைப் பயன்படுத்தினால் தண்ணீர் மிகவும் குறைவாக உறிஞ்சப்படும் தன்மை உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவேதான் கருவேல மரங்களை அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள்.

தலைவர்: சமூகக் காடு வளர்ப்பு திட்டத்தின்மூலம் கருவேல மரங்கள் நடவு செய்யப்படுவது சம்பந்தமான துறை அளித்த பதிலின் அடிப்படையில் இந்த உறுதிமொழி நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	6
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	543 / 2003
4.	பொருள்	:	மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்துவது குறித்து.
5.	2003–2004–ஆம் ஆண்டுக்கான சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	08.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.
			... 2003–2004–ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.300 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை எண்.60, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள்: 23.06.2003–ல் இத்திட்டத்தினை 2003–2004–ல் தொடர்ந்து செயல்படுத்திட அரசால் ரூபாய் 399.33 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

1997 முதல் 2002 வரை ஜப்பான் நாட்டு நிதி நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் வன மேம்பாட்டு திட்டங்களை அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	7
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	729 / 2003
4.	பொருள்	:	1997 முதல் 2002 வரை ஜப்பான் நாட்டு நிதி நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் வன மேம்பாட்டு திட்டங்களை அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	20210
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சி. சண்முகவேலு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். ... ஆம்
8.	துறையின் பதில்	:	ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை I 1997-98-ஆம் ஆண்டு முதல் 2004-05-ம் ஆண்டு வரை 4,80,179 எக்டேர் பரப்பில் ரூ.687.85 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. மேலும் அதே வங்கி உதவியுடன், தமிழ்நாடு காடு வளர்ப்புத்திட்டம் நிலை II , 2005-06 முதல் 2012-2013 வரை ரூ.567.42 கோடி செலவில் 1,77,500 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத்திட்டம் நிலை II-இன் பணிகள், 27 மாவட்டங்களில் 2005-06-ஆம் ஆண்டு 135 கிராமங்களிலும், 2006-07-ஆம் ஆண்டு 205 கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சமூக காடுகளில் புதிய மரக்கன்றுகளை நட அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	8
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (மு) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	731 / 2003
4.	பொருள்	:	சமூக காடுகளில் புதிய மரக்கன்றுகளை நட அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	26976
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	டாக்டர் சி. விஜயபாஸ்கர்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம், வனம் மறறும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். ... இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.
8.	துறை செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளுடன் குழு நேரடியாக கலந்துரையாடிய விவரம்	:	அரசுச் செயலாளர் : 2007–2008 –க்கு இன்னும் இது தொடங்கப்படவில்லை. இந்தப் பணிகளை பொதுப்பணித் துறை நடைமுறைப்படுத்துவது இல்லை. வனத்துறையின் முன்புதான் இந்தப் பணிகள் வரும். ஏரிப்பகுதிகள் இல்லையென்றால் காடுகளில் அந்தச் செடிகளை அவர்கள் நட்டு வந்தார்கள். இப்போது வனத்துறை சில மரவகைகளை தனியார் நிலங்களிலும் நடலாம் என்பது அரசாங்கத்தின் கருத்து. அதனால் தனியார் நிலங்களில் மானிய உதவியுடன் மரங்களை வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை முடிவு.
			தலைவர்: அவர்கள் தயாரித்து அவர்களே பயன்படுத்திக் கொள்ளலாமா?
			அரசுச் செயலாளர் : இந்த ஆண்டு இவைகளை நட்டுக்கொடுக்கிறோம். ரூ.1,500–ஐ மானியமாக கொடுக்க அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்கான அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். இது ஒரு பெரிய திட்டம் ஆகும்.

தலைவர்: இது குறித்து தனியார் லெவலில் முன் வந்தால் அதற்கு அனுமதி கொடுக்கிறீர்களா?

அரசுச் செயலாளர் : ஆம், இதை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தவிருக்கிறோம்.

தலைவர்: வருகின்ற 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு குழு ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறது. அப்போது இதுகுறித்து ஆய்வு செய்கிறோம். இதற்கான நிறைய தொகையை நாம் செலவு செய்கிறோம். அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் என்.எஸ்.எஸ். கேம்புகளில் நிலத்தடி நீர் சம்பந்தமாக செடிகளை நடுகிறார்கள். ஆகவே, அந்தத் துறையில் இதற்கான வாய்ப்பு இருந்தால் அதுகுறித்து நாம் பரிசீலிக்கலாம். உண்மையிலேயே இது ஒரு நல்ல திட்டம். சுற்றுச்சூழல் மாசுபட்டு வருகிறது என்று சொல்கிறீர்கள். அதனால், துறை இவ்வளவு நல்லதொரு முயற்சி எடுத்து, தனியார்கள் காடு வளர்ப்பதற்கு அனுமதியளிப்பதாகச் சொல்கிறீர்கள். அதேநேரத்தில், இதில், அரசுத் துறையைச் சேர்ந்த கல்லூரிகள், பள்ளிகள், பாதித்தொகை கிடைத்தால்கூட மிகச் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பு இருக்கிறது. துறை அந்தவகையிலும் ஆலோசனை செய்யவேண்டும். குழு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொள்ளும்போது, துறையினுடைய மாவட்ட அலுவலர்களுக்குத் தகவல் தெரிவித்து அந்த இடங்களை ஆய்வு செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. இது ஒரு தொடர் திட்டமாக இருப்பதால், இந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டதாகக் கருதி தற்போது கைவிடப்படுகிறது.

அரசுச் செயலாளர் : சட்டமன்றத்தில் இது ஒரு முக்கியமான பிரச்சினையாக எழுப்பப்படுகின்ற காரணத்தினால், சென்ற ஆண்டு கல்வி நிறுவனங்கள் மரங்கள் வளர்ப்பதற்கு, கிட்டதட்ட 1,08,000 மரங்கள் வளர்ப்பதற்கு வனத்துறை அவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில் மூங்கில் கூடை செய்யும் தொழிலாளர்கள் வேலையின்றி தவிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	9
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	642 / 2005
4.	பொருள்	:	தமிழகத்தில் மூங்கில் கூடை செய்யும் தொழிலாளர்கள் வேலையின்றி தவிப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	46654
	நாள்	:	27.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி. வளர்மதி ஜெபராஜ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். ... வேலையின்றி இருப்பதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	வனச் செயல் திட்டங்களின்படி காப்பு காடுகளில் வளர்ந்துள்ள மூங்கில்களை தீ பற்றும் அபாயத்தை தவிர்க்கவும், ஹைஜீனிக் கிளீனிங் (Hygenic cleaning) காகவும் மூங்கில்கள் வெட்டப்படுவதற்கு தடையில்லை. எனவே, மூங்கில் கூடை செய்யும் தொழிலாளர்களது சங்கத்திலிருந்து கோரிக்கை வரும் நிலையில் மூங்கில்கள் வழங்க பரிசீலிக்கப்படும். மேலும், அரசு ஆணை எண்.102, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்: 03.09.2007–ன்படி தனியார் நிலங்களில் வளர்க்கப்படும். (36 மரவகைகளில்) மூங்கில்களை மற்றொரு இடத்திற்கு எளிய முறையில் எடுத்து செல்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகள் 1968–லிருந்து விலக்களித்து அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, தனியார் நிலங்களில் விளையும் மூங்கில்கள் தொழிலாளர்களுக்கு எளிதாக கிடைக்க இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும். மேலும் மூங்கில் தொழில் செய்வோர் பயன்பெறும் வகையில் மத்திய அரசு நிதி உதவி கோரி, ஐந்து ஆண்டுகளுக்கான மூங்கில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

காடுகள் வளர்ப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாமை கிராமந்தோறும் நடத்துவது மற்றும் கிராமத்திற்கு வனத்துறை மூலம் நலத்திட்டங்கள் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	10
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	651 / 2005
4.	பொருள்	:	காடுகள் வளர்ப்பு திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாமை கிராமந்தோறும் நடத்துவது மற்றும் கிராமத்திற்கு வனத்துறை மூலம் நலத்திட்டங்கள் வழங்கப்படுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	75115
	நாள்	:	28.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி. வளர்மதி ஜெபராஜ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். ... 800 கிராமங்களில் ஏற்படுத்தப்படவுள்ளது. ...வனத்துறையால் நலப்பணிகள் மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	1) தமிழக அரசு வனத்துறையால் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் நிலை - II 2005-2006 ஆம் ஆண்டு முதல் 2012–2013 முடிய 800 கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2005–2006–ஆம் ஆண்டில் 135 கிராமங்களில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த 135 கிராமங்களிலும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென ரூ.41.79 இலட்சங்கள் 2005–06–ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2) தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டத்தின் கீழ்வரும் அனைத்து கிராமங்களிலும் இடைதாங்கு மண்டலப்பணிகள் அங்கத்தின்கீழ் வருவாய் பெருக்கு நடவடிக்கைகள் மற்றும் சமுதாய வளர்ச்சிப் பணிகள் போன்ற நலப்பணிகள் அளிக்கப்படுகிறது. 2005–06–ஆம் ஆண்டில் 135 கிராமங்களுக்கு இடைதாங்கு மண்டலப்

பணிகளுக்காக ரூ.259.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை–I ல் 260 கிராமங்களில் 2005–2006–ம் ஆண்டில் ரூ.370.00 இலட்சத்திற்கு இடைதாங்கு மண்டலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.



சிறுகுறு விவசாயிகளாகவும் அல்லது தினக்கூலிகளாகவும் வாழ்ந்துவரும் மலைவாழ் மக்களுக்கு வன நிலத்தில் விளைகின்ற வனப்பொருட்களை எல்லாம் அவர்களுக்கே இலவசமாக கொடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	11
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	371 / 2006
4.	பொருள்	:	சிறுகுறு விவசாயிகளாகவும் அல்லது தினக்கூலிகளாகவும் வாழ்ந்துவரும் மலைவாழ் மக்களுக்கு வன நிலத்தில் விளைகின்ற வனப்பொருட்களை எல்லாம் அவர்களுக்கே இலவசமாக கொடுப்பது குறித்து.
5.	2006–2007–ஆம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	10.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர்.
			... அரசின் பரிசீலனையில் உள்ளது
8.	துறையின் பதில்	:	அரசாணை (நிலை) எண்.79, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்:29.04.2003–ன்படி வனத்தில் விளையும் சிறு வன மகசூல்களை மலைவாழ் மக்களுக்கு, அம்மக்களைக் கொண்டு ஒரு குழு அமைத்து அக்குழுவின் மூலமாக இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மலைவாழ் மக்கள் தாங்கள் வளர்க்கின்ற செம்மறி ஆடுகளை பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தவிர மற்ற வனப்பகுதிகளில் மேய்ப்பதற்கான கட்டண வனப்பகுதிலிருந்து அரசாணை (நிலை) எண்.47, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்: 03.03.2000–ன்படி விலக்களிக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

விலங்குகளாலே யானைகள் மற்றும் காட்டுமாடுகள், பன்றிகளாலே ஏற்படுகின்ற இழப்பீடுகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	12
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	929 / 2006
4.	பொருள்	:	விலங்குகளாலே யானைகள் மற்றும் காட்டுமாடுகள், பன்றிகளாலே ஏற்படுகின்ற இழப்பீடுகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்படுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	350
	நாள்	:	23.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கோவைதங்கம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும்.
8.	துறையின் பதில்	:	யானைகளால் ஏற்படும் இழப்புகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின்படி, உயிர் சேதத்திற்கு அவரது வாரிதாரர்களுக்கு ரூ.1,00,000/– இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. காயத்திற்கு காயத்தின் தன்மைக்கு ஏற்றவாறு இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதே போல் பயிர் சேதாரத்திற்கு சேதாரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உயர்ந்தபட்சமாக ரூ.15,000/–வரை முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. காட்டுமாடுகள் மற்றும் காட்டுப் பன்றிகளால் ஏற்படும் இழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க முதல் முறையாக மாநில அரசு 2006–2007 திட்டத்தில் (பகுதி–I)ன் கீழ் ரூ.50,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து மேற்காண் விலங்குகளால் ஏற்படும் இழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை முன்னுரிமையின் அடிப்படையில் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தேசிய பறவையான மயில் இனத்தை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	13
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	930 / 2006
4.	பொருள்	:	தேசிய பறவையான மயில் இனத்தை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	359
	நாள்	:	23.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. செ.ம. வேலுசாமி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... மயில்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
8.	துறையின் பதில்	:	தேசிய பறவையான மயில் இனம் இடருண்டாக்கும் விலங்குகளான யானை, புலி போன்ற விலங்குகள் வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972– அட்டவணை I-ன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த வகை பறவைகளை வேட்டையாடுதல் மற்றும் அத்தகைய பறவைகளின் இறைச்சி அல்லது பறவைகளிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் வைத்திருத்தல் போன்ற குற்றத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீளும் சிறை தண்டனையுடன் ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறையாத அபராதமும் தண்டனையாக விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்தன்மை கொண்ட குற்றத்தை இரண்டாவது அல்லது அதை தொடர்ந்து செய்யும் நிகழ்வுகளில் சிறைத்தண்டனை காலம் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீள கூடியதாகவும், கூடவே ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் குறையாமல் அபராதமும் விதிக்கப்பட வேண்டுமென சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் தேசிய பறவையான மயில் இனத்தைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மயில்கள் வேட்டையாடுதல் முழுவதுமாக தடுக்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

அமிர்தி காட்டிலிருந்து தினந்தோறும் சந்தன மரங்கள் கடத்தப்பட்டு வருகின்றன. அவற்றை தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	14
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	987/2006
4.	பொருள்	:	அமிர்தி காட்டிலிருந்து தினந்தோறும் சந்தன மரங்கள் கடத்தப்பட்டு வருகின்றன. அவற்றை தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்வது குறித்து.
5.	கவன ஈர்ப்பு தீர்மானம்	:	
	நாள்	:	24.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சி. ஞானசேகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும்
8.	துறையின் பதில்	:	அமிர்தி வனப்குதியில் இருக்கும் சந்தன மரங்களை இரவு பகலாக துப்பாக்கி ஏந்திய நிலையில் வன ஊழியர்கள் பாதுகாத்து வருகின்றனர். அமிர்தி வனச்சரக பாதுகாப்பு பணியினை, வேலூர் காவல் நிலையத்தை சார்ந்த வன ஊழியர்கள் மற்றும் திருவண்ணாமலை வனக்கோட்டத்தைச் சார்ந்த வன ஊழியர்கள் மேற்கொண்டுள்ளார்கள். மேலும் வனச்சரகத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஜீப்பில் வனச்சரகர் மற்றும் ஊழியர்களுடன் இரவு முழுவதும் துப்பாக்கியுடன் சந்தன மரங்கள் உள்ள பகுதிகளில் ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது மட்டுமில்லாமல் மற்ற வனச்சரகங்களில் உள்ள வனச்சரகர்கள் தங்கள் ஊழியர்களுடன் இரவு நேரங்களில் திடீரென்று அமிர்தி வனப்பகுதிகளில் சென்று ரோந்து மேற்கொண்டு, அமிர்தி வனப்பகுதியில் சந்தன மரங்கள் திருடு போகாமல் பாதுகாத்து வருகின்றனர்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் சமூக காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வளர்க்கப்படும் மரங்களை அதிகரிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	15
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	1142 / 2006
4.	பொருள்	:	தமிழ்நாட்டில் சமூக காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வளர்க்கப்படும் மரங்களை அதிகரிப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	2251
	நாள்	:	30.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கி. ஆறுமுகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர்.
			... நடவு செய்யத்தக்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் சமூகக்காடுகள், வளர்ப்பு திட்டம் போன்று ஏரி மற்றும் குளங்களின் கரைகளில் கருவேல் மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் 2006–2007–ஆம் ஆண்டில் ரூ.1.88 கோடி செலவில், 1095 எக்டேர் பரப்பளவில் கருவேல் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மைய அரசின் ஊரக வளர்ச்சி துறை நிதியுதவியுடன் 24 மாவட்டங்களில் ரூ.8.9328 கோடியில் 279.89 இலட்சம் காட்டாமணக்கு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, காப்புக்காட்டின் எல்லையோரங்கள் மற்றும் தனியார் நிலங்களில் நடவு செய்யப்பட்டது.
			இந்த நிதியாண்டில் சமூக வனக்காடுகளை ஊக்குவிக்கும் வண்ணம் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

1) "தனியார் நிலங்களில் மரவளர்ப்பு" திட்டத்தின் கீழ் ரூ.10.00 கோடி செலவில் 85.44 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து 24,760 ஏக்கர் தனியார் விவசாய நிலங்களில் வனத்துறையால் இலவசமாக நடவு செய்யப்படவுள்ளது.

2) சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சி மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் ரூ.4 கோடி செலவில் சாலை ஓரங்களில் மரம் வளர்ப்பு திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

3) பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.90 இலட்சம் செலவில் 22.50 இலட்சம் வளர்ந்த மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தனியார் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு தேவையான உதவிகளை அரசு செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	16
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	372 / 2007
4.	பொருள்	:	தனியார் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு தேவையான உதவிகளை அரசு செய்வது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	11604
	நாள்	:	09.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. டி. ராமச்சந்திரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... அதைப்பற்றி யோசிக்கப்படும்
8.	துறையின் பதில்	:	தனியார் நிலங்களில் எந்தவித தடையும் இன்றி சந்தன மரம் வளர்க்கலாம். வனத்துறை, கோவை வனமரபியல் கோட்டத்தின் மூலம் தரமான விதைகளை விற்பனை செய்கிறது. சந்தன மரங்களை வளர்க்க ஆலோசனை கேட்டு வருபவர்களுக்கு வனத்துறையால் தக்க ஆலோசனை வழங்கப்படுகிறது. தனியார் நிலங்களில் அதிக அளவு சந்தன மரம் வளர்ப்பதற்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது. வனத்துறை இதற்கு தேவையான ஒத்துழைப்பினை செய்து வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

வன சரணாலயம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	17
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	375 / 2007
4.	பொருள்	:	வன சரணாலயம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து.
5.	கவன ஈர்ப்பு தீர்மானம்	:	
	நாள்	:	09.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி ரா. லீமா ரோஸ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
8.	துறையின் பதில்	:	வன உயிரின சரணாலயம் மற்றும் பூங்கா இல்லாத, வனப்பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கு உரிய படிவத்தில் பயனீட்டாளர் துறையினரிடமிருந்து இந்திய வனப்பாதுகாப்புச் சட்டம் 1980–ன் கீழ் கருத்துரு பெறப்படின், வனப்பரப்பு 1.00 எக்டருக்கு குறைவாக இருப்பின் மைய அரசு கடித எண். 11–9/98வபா, நாள்: 24.09.2007–ன் படி மாநில அரசினால் அரசாணை வழங்க ஆவண செய்யப்படும். வனப்பரப்பு 1.00 எக்டருக்கு மிகையானால் கருத்துரு, மைய அரசிற்கு அனுப்பி அனுமதி பெற ஆவண செய்யப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் யானைகள் மலையடிவார கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ள குடியிருப்புகள் மற்றும் பயிர்களை சேதப்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	18
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	685 / 2007
4.	பொருள்	:	வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் யானைகள் மலையடிவார கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ள குடியிருப்புகள் மற்றும் பயிர்களை சேதப்படுத்துவது குறித்து.
5.	சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம்	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர்.
			... பாதிக்கப்பட்ட யாருமே விண்ணப்பம் கொடுக்கவில்லை. வனத்துறை அதிகாரிகள் சென்று அவர்களிடம் விண்ணப்பம் கேட்டு வாங்கி பரிசீலனையில் இருக்கிறது.
8.	துறையின் பதில்	:	வனப்பகுதியில் ஏற்படும் கடும் வறட்சியால் வன உயிரினங்கள் வனங்களுக்கு அருகாமையில் உள்ள கிராமங்களுக்குள் புகாதவாறு 25982 தடுப்பணைகள் மற்றும் 2829 கசிவுநீர் குட்டைகள் பல்வேறு திட்டத்தின் கீழ் வனத்துறை மூலம் கட்டப்பட்டு வன உயிரினங்கள் தண்ணீர் குடிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கோடைக்காலத்தில் ஏற்படும் கடும் வறட்சியைப் போக்க 79 ஆழ்துளை கிணறுகள் வனங்களுக்குள் அமைக்கப்பட்டு வன உயிரினங்கள் தண்ணீர் குடிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் வன உயிரினங்கள் வனங்களின் அருகேயுள்ள கிராமங்களுக்குள் புகுந்து குடியிருப்புகளையும், பயிர்களையும் சேதப்படுத்தாதவாறு 2005–2006–ஆம் ஆண்டில் 62.5 கிலோ மீட்டர் தூரத்திற்கும், 2006–2007–ஆம் ஆண்டில் 262.5 கிலோ மீட்டர் தூரத்திற்கும் சூரிய மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து 2007–2008–ஆம் ஆண்டில் 261.25 கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்வேலி அமைத்திட நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வளவு ஏற்பாடுகளையும் மீறி வன உயிரினங்கள் வனங்களை விட்டு வனங்களுக்கு அருகாமையிலுள்ள கிராமங்களில் புகுந்து உயிர்ச்சேதமோ அல்லது பயிர்சேதமோ ஏற்படுத்தினால் அதற்குண்டான நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.



சிறுகுறு விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	19
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	880 / 2007
4.	பொருள்	:	சிறுகுறு விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுவது குறித்து.
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர்.
			... ரூ.2 கோடி செலவில் 50 இலட்சம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	ஆசாணை எண்.128, சுற்றுச்சூழல் (மற்றும்) வனத்துறை, நாள்: 30.05.2007–ல் ரூ.90.00 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டு, தமிழ்நாடு வனத்துறை ஆராய்ச்சிப்பிரிவு மூலம் உயர்ரக மரக்கன்றுகள் சுமார் 22.5 இலட்சங்கள் உற்பத்தி செய்து, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாய் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் தனியார் நிலங்களில் மாவளர்ப்பு திட்டத்தின்கீழ் விவசாயிகளின் தரிசு நிலங்களில் துறையின் மூலமாக மரக்கன்றுகள் உற்பத்தி செய்து இலவசமாக நடவு செய்யும் திட்டம் ரூ.10.00 கோடி செலவில் 2007–08–ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.

சிறுகுறு விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	20
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	881 / 2007
4.	பொருள்	:	தனியார் மரம் வளர்ப்பதை ஊக்குவிப்பதற்கு மானியம் வழங்குவது குறித்து.
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... ரூ.10 கோடி செலவிலே மரம் வளர்ப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும்.
8.	துறையின் பதில்	:	தனியார் நிலங்களில் மரம் நடும் திட்டத்தின் கீழ் ரூ.10 செலவில் 85.44 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து 24,760 ஏக்கர் தனியார் விவசாய நிலங்களில் இலவசமாக வனத்துறையால் நடவு செய்யும் திட்டம் இந்த ஆண்டு நடைமுறைப் படுத்த அரசாணை (நிலை) எண்.117, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள்: 26.10.2007–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டியது குறித்து.

1.	வரிசை எண்.	:	21
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	889 / 2007
4.	பொருள்	:	வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டியது குறித்து.
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர். ... 2007–2008–ஆம் ஆண்டிலும் வன விலங்குகளினால் பாதிப்பு அடைபவர்களுக்கு இழப்பீடு வழங்க ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	உயிரினங்களால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட 2007–2008–ஆம் ஆண்டிற்கு ரூ.50.00 இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை நிலை எண்.85 சுற்றுச்சூழல் (ம) வனத் (வனம்.5) துறை, நாள்: 14.08.2007–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE WILL PREVAIL

வனப்பகுதிகளில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	22
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் (ம) வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	895 / 2007
4.	பொருள்	:	வனப்பகுதிகளில் பணியாற்றும் களப் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படுவது குறித்து.
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு ந. செல்வராஜ், வனத்துறை அமைச்சர்.
			... ரூ.4.5 கோடி செலவில் இந்த ஆண்டு 158 குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	2007–2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி–2–இன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.8134.33 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வனப் பகுதிகளில் பணிபுரியும் களப் பணியாளர்களுக்கு 158 குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் பணியும் அடங்கும். 158 குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நெடுஞ்சாலைத் துறை

தருமபுரியிலிருந்து, திருப்பத்தூர் வழியாக சென்னை செல்லும் பிரதான சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துவது குறித்தும், அச்சாலையில் செம்மாண்டகுப்பம் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தினை மேம்பாலமாக உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	23
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	596 / 2002
4.	பொருள்	:	தருமபுரியிலிருந்து, திருப்பத்தூர் வழியாக சென்னை செல்லும் பிரதான சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துவது குறித்தும், அச்சாலையில் செம்மாண்டகுப்பம் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தினை மேம்பாலமாக உயர்த்துவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	27020
	நாள்	:	05.05.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு கு. மனோகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்
			... முதலில் அதை மாநில சாலையாக ஸ்டேட் ஹைவேஸ் ஆக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. பாலத்தை பொறுத்தவரையில் அந்தப்பாலம் கட்டப்படவேண்டிய பாலம்தான். 30 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. நிதி நிலையைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தருமபுரியிலிருந்து திருப்பத்தூர் வழியாக சென்னை செல்லும் பிரதான சாலையானது, ஒகேனக்கல்–தருமபுரி–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலையாகும். இந்த சாலையின் நீளம் 108.20 கி.மீ. ஆகும். இச்சாலை பல்வேறு பகுதிகளில் மாவட்ட இதர சாலை, மாவட்ட முக்கிய சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளை உள்ளடக்கியதாக இருந்தது. இச்சாலைகளை இணைத்து அரசாணை எண்.140, நெடுஞ்சாலைத் (எச்.என்–2) துறை, நாள்: 14.08.2001–ல், ஒகேனக்கல்–பென்னாகரம்–தருமபுரி–திருப்பத்தூர் சாலை கி.மீ.0/0–108/2 என மாநில நெடுஞ்சாலையாக (எண்.60) தரம் உயர்த்தப்பட்டது.

இச்சாலை முழுவதும் தற்போது இரு வழித்தடமாக உள்ளது.

தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம் செய்யப்படுவதற்கு முக்கியமாக துறைமுகம், தொழிற்பேட்டைகள் நிறைந்த பகுதிகளை இணைக்கும் சாலையாக இருக்க வேண்டும். மேலும், இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு சுமார் 26000 பி.சி.யு. மட்டுமே உள்ளது. இதைத் தவிர இச்சாலை பிற மாநிலங்களை இணைக்கும் சாலையாக இல்லாத காரணத்தால் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துவதற்கு கருத்துரு எதுவும் அனுப்பப்படவில்லை. தவிர, தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துதல் மத்திய அரசின் கொள்கை முடிவிற்கு உட்பட்டதாகும்.

இச்சாலையில் தருமபுரி மாவட்ட எல்லையில் கி.மீ. 53/4–ல் செம்மாண்டகுப்பம் ஆறு குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் ஆற்றின் நீர் வழிப்பாதையின் நீளம் 19.80 மீட்டர் ஆகும். இவ்விடத்தில் ஏற்கனவே 2.13 மீட்டர் நீளமுள்ள 6 கண்கள் கொண்ட மூழ்கு தாம்போகி உள்ளது. இதற்கு பதிலாக புதிய பாலம் கட்ட நபார்டு திட்டத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பிற்கு அரசு ஆணை எண்.78, நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யூ1) துறை, நாள்: 26.05.2006 நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMILNADU LEGISLATURE
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நபார்டு உதவியுடன் தமிழ்நாட்டில் எங்கெங்கு புதியதாக பாலம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன மற்றும் திண்டுக்கல்லில் புதியதாக பாலம் கட்டப்படுமா என்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	24
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	698 / 2000
4.	பொருள்	:	நபார்டு உதவியுடன் தமிழ்நாட்டில் எங்கெங்கு புதியதாக பாலம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளன மற்றும் திண்டுக்கல்லில் புதியதாக பாலம் கட்டப்படுமா என்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	22570
	நாள்	:	17.05.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு ஆர். சக்ரபாணி.
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கோசி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்
			... நபார்டு உதவியுடன் தமிழ்நாட்டில் கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பாலம் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் நபார்டு திட்டம் மூலம் புதியதாக பாலம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் நபார்டு வங்கி உதவியுடன் 109 பாலங்கள் கட்டுவதற்கு 2000–01 ஆம் ஆண்டு ரூ.86 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்தது. இவற்றில் கடலூர் மாவட்டத்தில் 3 பணிகள் ரூ.136.50 இலட்சம் செலவிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 பணிகள் ரூ.535 இலட்சம் செலவிலும், திருவாரூர் மாவட்டத்தில் 7 பணிகள் ரூ.321 இலட்சம் செலவிலும், திருச்சி மாவட்டத்தில் 2 பணிகள் ரூ.125 இலட்சம் செலவிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 8 பணிகள் ரூ.201 இலட்சம் செலவிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 2 பணிகள் ரூ.514.50 இலட்சம் செலவிலும் முடிக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் பணிகள் எதுவும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

2,937 கி.மீ. ஊரகச் சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	25
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	432 / 2003
4.	பொருள்	:	2,937 கி.மீ. ஊரகச் சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்துவது குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டுக்கான ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	29.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்
			... 2 ஆயிரத்து 937 கி.மீ. ஊரகச் சாலையில் ரூ.367 கோடியே 22 இலட்சம் செலவில் தார் சாலைகளாக மேம்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகின் மூலம் 2003–04 ஆம் ஆண்டு 2937 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் ரூ.363.00 கோடி மதிப்பில் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அப்பணிகள் பின் வருமாறு முடிவடைந்துள்ளன.

வருடம்	முடிக்கப்பட்ட சாலையின் நீளம் (கி.மீ.யில்)	செலவினம் (ரூ.கோடியில்)
2003–04	1132	ரூ.136.00
2004–05	1542	ரூ.193.00
2005–06	263	ரூ.34.00
மொத்தம்	2937	ரூ.363.00

9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

வேலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 15 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலையில் மேம்பாடு செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	26
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	816 / 2006
4.	பொருள்	:	வேலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 15 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலையில் மேம்பாடு செய்வது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான நெடுஞ்சாலைத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	21.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர்
			... ரூ.500 இலட்சம் மதிப்பிலே மேம்பாடு செய்யப்படவுள்ளன.
8.	துறையின் பதில்	:	2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின் கீழ் அரசாணை எண்.153, நெடுஞ்சாலைத் (எச்.எப்.1) துறை, நாள்: 08.09.2006–ல் வேலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில், மாநில நெடுஞ்சாலைகளில் 15.4 கி.மீ. நீள சாலைப் பணிகள் பின்வருமாறு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
			அ) வேலூர் மாவட்டத்தில் திருவலம்–காட்பாடி–வெங்கடகிரிகோட்டா சாலை கி.மீ. 56/3–60/0 (3.7 கி.மீ) ஒருவழித்தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி ரூ.100 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

			ஆ) ஈரோடு மாவட்டத்தில் பொள்ளாச்சி–தாராபுரம்–கரூர் சாலை கி.மீ.56/4–57/2, 62/5–63/8 மற்றும் 73/4–82/800 (11.70 கி.மீ) இடைவழித்தடத்திலிருந்து இருவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி ரூ.400 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.



பள்ளிக்கூடங்களுக்கும் மற்றும் மருத்துவமனைகளுக்கும் அருகே வேகத் தடைகள் ஏற்படுத்த வேண்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	27
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	257 / 2007
4.	பொருள்	:	பள்ளிக்கூடங்களுக்கும் மற்றும் மருத்துவமனைகளுக்கும் அருகே வேகத் தடைகள் ஏற்படுத்த வேண்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	1026
	நாள்	:	04.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் ... இந்த ஆண்டு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.
8.	துறையின் பதில்	:	ஒரே மாதிரியான வேகத்தடைகள் அமைக்கப்பட வேண்டிய 1678 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு 1401 இடங்களில் மேம்பாடு செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. கண்டறியப்பட்ட இடங்களில் பள்ளிகள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு அருகில் அமைந்துள்ள நெடுஞ்சாலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது கண்டறியப்பட்ட மற்றும் அமைக்கப்பட்டுள்ள வேக தடைகளின் விவரம் பின்வருமாறு:

சாலை வகை	கண்டறியப்பட்டவை	முடிக்கப்பட்டவை
மாநில நெடுஞ்சாலைகள்	688	626
மாவட்ட முக்கிய சாலைகள்	381	358
மாவட்ட இதர சாலைகள்	609	417
மொத்தம்	1678	1401

எஞ்சியுள்ள இடங்களில் பணிகள் மார்ச் 2008-க்குள் முடிக்கப்படும்.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 30.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோட்டப் பொறியாளருக்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	28
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	755 / 2007
4.	பொருள்	:	கோட்டப் பொறியாளருக்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	24.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர்
			... கோட்டப் பொறியாளரைப் பொறுத்தவரையில் முன்பு ரூ.30 இலட்சம் வரை தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படலாம். இனிமேல் ரூ.50 இலட்சம் வரை தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்குகின்ற ஆணை வெளியிடப்படவிருக்கிறது.
8.	துறையின் பதில்	:	இதற்கான ஆணை, அரசாணை எண்.80 நெடுஞ்சாலைத் (எச்.கே.3) துறை, நாள்: 28.03.07–ல் வழங்கப்பட்டுள்ளது. பொறியாளர்களின் அதிகார வரம்பை உயர்த்தியதால் மதிப்பீடுகளுக்கு விரைவில் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டதுடன் ஒப்பந்தப்புள்ளிகளும் விரைவில் இறுதி செய்யப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன.

	முந்திய வரம்பு	திருத்திய வரம்பு
மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்குதல்		
கோட்டப் பொறியாளர்	ரூ.30 லட்சம் வரை	ரூ.50 லட்சம் வரை

9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	30.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

கண்காணிப்பு பொறியாளருக்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	29
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	756 / 2007
4.	பொருள்	:	கண்காணிப்பு பொறியாளருக்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுவது குறித்து.
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்
			... இரண்டு துறையும் பிரிக்கப்பட்டு செயல்படுத்துகிற முறையில் 157 விரிவுரையாளர்களும் 31 சீனியர் விரிவுரையார்களும் வருகிற நிதியாண்டில் ஆசிரியர் தேர்வுவாரியத்தின் மூலம் நேரடி நியமனம் பெறுவார்கள்.
8.	துறையின் பதில்	:	பள்ளிக்கல்வி இயக்ககத்திலிருந்து ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், தனியாக பிரிக்கப்பட்ட பிறகு 2000–2001 கல்வி ஆண்டில் 232 விரிவுரையாளர்களும், ஏழு முதுநிலை விரிவுரையாளர்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பின்னடைவுப் பணியிடங்களையும் சேர்த்து 117 விரிவுரையாளர் பணியிடங்களையும் 46 முதுநிலை விரிவுரையாளர் பணியிடங்களையும் தேர்வு செய்ய பிப்ரவரி 2006–ல் ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் கோரப்பட்டது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 117 விரிவுரையாளர்களில் 85 விரிவுரையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 15.06.2007 அன்று 85 விரிவுரையாளர்களுக்கு நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 32 விரிவுரையாளர்களை தெரிவு செய்ய ஆசிரியர் தேர்வு வாரிய தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 46 முதுநிலை விரிவுரையாளர்களில் 32

பேர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 14 பேர்களை தெரிவு செய்ய ஆசிரியர் தேர்வு வாரிய தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 31.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.



திராவிட இயக்க முன்னோடிகளின் வாழ்க்கை வரலாற்றை பாடத் திட்டங்களில் இடம் பெறச் செய்வது குறித்து

1.	வரிசை எண்.	:	68
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	710 / 2000
4.	பொருள்	:	திராவிட இயக்க முன்னோடிகளின் வாழ்க்கை வரலாற்றை பாடத் திட்டங்களில் இடம் பெறச் செய்வது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	32264
	நாள்	:	07.11.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. குத்தலாம் பி. கல்யாணம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்
			... பாடநூல் தயாரிப்புப் பணி வல்லுநர் குழு பரிந்துரையின் அடிப்படையில் வருங்காலத்தில் பாடத் திட்டங்களில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கப்படும்
8.	துறையின் பதில்	:	புதிய பாடத் திட்டத்தின்படி மாற்றி அமைக்கப்பட்ட புதிய பாடநூல்களில் + வரலாறு பாடநூலில் பகுதி 5–1 Pupil acquires knowledge about the aime so the socio - religious - reform movements என்ற தலைப்பில் திராவிட இயக்க முன்னோடிகளின் வாழ்க்கை 10–ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் தலைப்பு 11–4–1 Pupil acquires knowledge about social reformers–இல் இடம் பெற்றுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்குவது குறித்து

1.	வரிசை எண்.	:	69
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	781 / 2000
4.	பொருள்	:	மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் வானொலிப் பெட்டிகள் வழங்குவது குறித்து
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	23243
	நாள்	:	07.11.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. எஸ்.என். பாலசுப்ரமணியன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்
			... 20,000 பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டியுடன் கூடிய ஒலி நாடக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 6,100 தொடக்க / நடுநிலைப் பள்ளிகளுக்கு இவ்வாண்டு இவ்வசதி ஏற்படுத்தித்தரப்படவுள்ளது.
8.	துறையின் பதில்	:	மாநிலத்தில் உள்ள மிகப் பெரும்பாலான பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் உள்ளன. எனவே வானொலிப் பெட்டிகள் வழங்குதல் பிரச்சனை எழாது. மேலும் பள்ளிகளே வானொலிப் பெட்டிகள் வாங்குவது தொடர்பில், பள்ளியின் ஒலி, ஒளிக்கல்வி கட்டண நிதியின் அந்தந்த ஆண்டின் வருவாயிலிருந்து பள்ளித் தலைமை ஆசிரியரே விதிகளுக்குட்பட்டு வாங்கிக் கொள்ளலாம். நிதிக் குவிப்பிலிருந்து வாங்குவதற்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் ரூ.10,000/–வரையும் அதற்கு மேற்பட்ட தொகைக்கு இயக்குநர் அனுமதியும் பெறப்பட வேண்டும். தற்போது ரூ.10,000/–வரை முதன்மைக் கல்வி அலுவலர் என்பதை ரூ.50,000/–என அதிகரித்திட அரசின் அனுமதி வேண்டி கருத்துரு பெறப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

பட்டதாரி ஆசிரியர்களின் வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பை தளர்த்தல் குறித்து

1.	வரிசை எண்.	:	70
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	115 / 2001
4.	பொருள்	:	பட்டதாரி ஆசிரியர்களின் வேலைவாய்ப்பிற்கு வயது வரம்பை தளர்த்தல் குறித்து
5.	2001–2002–ம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்	:	
	நாள்	:	20.08.2001, 21.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. வை. சிவபுண்ணியம், திரு.சி. ஞானசேகரன் M.L.A., திரு.எ.வ. வேலு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்
			... மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல சட்டத்தளர்வு ஏற்பட்டிருந்தால் அதை இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்
8.	துறையின் பதில்	:	தற்போது பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு வயது வரம்பு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தனியார் உதவிபெறும் பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல் குறித்து

1.	வரிசை எண்.	:	71
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	123 / 2001
4.	பொருள்	:	தனியார் உதவிபெறும் பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல் குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	395
	துணை வினா		
	நாள்	:	23.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. மு.அப்பாவு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் ... சில தேவையான இடங்களில் அது பரிசீலனை செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து வகைப் பள்ளிகளின் தரத்தையும் உயர்த்த தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது அனைத்து வகைப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வியை அளிக்கும் பொருட்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயதுவரம்பு தளர்த்தும் போது எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமன்றி வேலைவாய்ப்பு அலுவலக (Seniority) முன்னுரிமையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் குறித்து

1.	வரிசை எண்.	:	72
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	129 / 2001
4.	பொருள்	:	பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயதுவரம்பு தளர்த்தும் போது எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமன்றி வேலைவாய்ப்பு அலுவலக (Seniority) முன்னுரிமையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	522
	நாள்	:	24.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. ஜி.கே. மணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்
			... அதில் சீனியாரிட்டியும் consider பண்ணவேண்டும் என்று சொன்னால், அதற்கும் ஏதேனும் ஒரு மார்க்கை சேர்த்து போடுவதற்காக அரசு பரிசீலனை செய்யும்.
8.	துறையின் பதில்	:	தற்போது பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு வயது வரம்பு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. மேலும் தற்போது வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையிலே ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

மாணவ மாணவிகளுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் தனியாருடன் "கான்ட்ராக்ட் சிஸ்டம்" மூலம் கணினி கல்வி கற்பதில் உள்ள இடர்பாடுகள் நிவிர்த்தி செய்வது குறித்து

1.	வரிசை எண்.	:	73
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	142 / 2001
4.	பொருள்	:	மாணவ மாணவிகளுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் தனியாருடன் "கான்ட்ராக்ட் சிஸ்டம்" மூலம் கணினி கல்வி கற்பதில் உள்ள இடர்பாடுகள் நிவர்த்தி செய்வது குறித்து
5.	2001–2002–ம் ஆண்டிற்கான கல்வித்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம்	:	
	நாள்	:	27.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்
			... இத்தகைய "கான்ட்ராக்ட் சிஸ்டமானது" இதை செயல்படுத்துவதில் தடையாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதைப் பார்த்து அவர்களுடைய குறைபாடுகளையெல்லாம் பார்த்து நிவிர்த்தி செய்ய வேண்டிய நடவடிக்கையில் ஈடுபடும்.
8.	துறையின் பதில்	:	அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட பள்ளிகளில் தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தனியார் ஒப்பந்ததாரர்களால் கணினி நிறுவப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் ஏதேனும் இடர்பாடுகள் ஏற்பட்டால் அது குறித்து ஒவ்வொரு காலாண்டிலும் ஒப்பந்தகாரர்களுக்காக நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்தில் குறைகளை சுட்டிக்காட்டி அக்குறைகள் உடனடியாக நிவிர்த்தி செய்யப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியதில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் போதிய ஆசிரியர்களை நியமிப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	74
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	250 / 2001
4.	பொருள்	:	தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியதில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் போதிய ஆசிரியர்களை நியமிப்பது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	86
	நாள்	:	14.09.2001
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. ப. ரங்கநாதன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்
			... 2001–2002–ம் கல்வியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் முதுகலை ஆசிரியராக பதவி உயர்வு மூலம் சில பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் இந்த கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்படும். ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	2001–2002–ம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள முதுகலை ஆசிரியர் பணியிடங்களுள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்ட பணியிடங்கள் போக எஞ்சிய பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் முதுகலை ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்களையே அந்தந்த சட்டமன்றத் தொகுதியில் உள்ள பள்ளிக்கூடங்களில் கௌரவ உறுப்பினர்களாக சேர்த்தல் குறித்து

1.	வரிசை எண்.	:	75
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	26 / 2002
4.	பொருள்	:	பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை அந்தந்த சட்டமன்றத் தொகுதியில் உள்ள பள்ளிக்கூடங்களில் கௌரவ உறுப்பினர்களாக சேர்த்தல் குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	2223
	நாள்	:	14.03.2002
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. எச்.எம். ராஜு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்
			... மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கக்கூடிய கருத்தாகும். ஆகவே, அதைப்பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வோம்.
8.	துறையின் பதில்	:	டிசம்பர் 2006–ல் பெற்றோர் ஆசிரியர் கழக விதி 8(ஆ) நீக்கம் செய்யப்பட்டு இது குறித்த கற்றறிக்கை தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளரால் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்கள்/ மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்/ மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வாளர்களுக்கும் அதன் நகல் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் கௌரவ உறுப்பினர்களாக சட்டமன்ற உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ள இயலாது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவுச் செய்யப்பட்டது.

காவல் துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு சிறப்புப் பள்ளி (School of Excellence) ஏற்படுத்துதல் குறித்து

1.	வரிசை எண்.	:	76
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	217 / 2002
4.	பொருள்	:	காவல் துறையில் பணிபுரிபவர்களின் குழந்தைகளுக்கு சிறப்புப் பள்ளி (School of Excellence) ஏற்படுத்துதல் குறித்து
5.	2002–2003–ம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	25.04.2002
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர் ... இந்தப்பணி வண்டலூரில் தமிழ்நாடு காவலர் கழகம் அமைந்துள்ள இடத்தில் ஏற்படுத்தப்படும். 2002–2003–இல் இந்தத் திட்டத்தின் முதற்கட்டப்பணி எடுத்துக்கொள்ளும்பொழுது, புதிய பள்ளி மற்றும் மாணவர் தங்கும் விடுதி கட்டடங்களுக்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	காவலர்களின் குழந்தைகளுக்காக சிறப்பு பள்ளி எதுவும் பள்ளிக் கல்வித் துறையால் நிர்மாணிக்கப்பட வில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப்பதிவு செய்யப்பட்டது.

தமிழகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கணித பாடப்பிரிவிற்கு ஆசிரியர்களை நியமித்தல் குறித்து

1.	வரிசை எண்.	:	77
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	397 / 2002
4.	பொருள்	:	தமிழகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கணித பாடப்பிரிவிற்கு ஆசிரியர்களை நியமித்தல் குறித்து
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	13195
	நாள்	:	25.10.2002
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. சி. சண்முகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் ... 2002–2003–ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்ந்தெடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படும்.
8.	துறையின் பதில்	:	தற்போது காலியாகவுள்ள கணிதப்பாட ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் கலந்தாய்வு முறையில் நிரப்பப்பட்டு வருகிறது. மீதமுள்ள பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்படும். இந்த ஆண்டு 1179 பட்டதாரி கணித ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் துவங்குவது குறித்து

1.	வரிசை எண்.	:	78
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	182 / 2003
4.	பொருள்	:	தமிழ்நாட்டில் புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் துவங்குவது குறித்து
5.	2003–2004–ம் ஆண்டிற்கான கல்வித்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் ... ரூ.431.61 இலட்சம் செலவில் 30 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகள் துவங்கப்படும்
8.	துறையின் பதில்	:	2003–2004–ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ், அரசாணை (நிலை) எண்.65, பள்ளிக் கல்வித் துறை நாள்.27.05.2003–இல் 30 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.68, பள்ளிக் கல்வித் துறை, நாள். 02.06.2003–இல் 30 மேல்நிலைப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டு, பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி செயல்முறை கூடங்கள் அமைப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	79
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	183 / 2003
4.	பொருள்	:	உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி செயல்முறை கூடங்கள் அமைப்பது குறித்து
5.	2003–2004–ம் ஆண்டிற்கான கல்வித்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் ... ரூ.225 இலட்சம் செலவில் 300 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் ஆங்கில மொழி செயல்முறை கூடங்கள் அமைக்கப்படும்
8.	துறையின் பதில்	:	அரசாணை (நிலை) எண்.70, பள்ளிக் கல்வித் துறை நாள்.03.06.2003–ன்படி 2003–04–ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.225 செலவில் தேர்வு செய்யப்பட்ட 300 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி தொடங்கப்படுவது குறித்து

1.	வரிசை எண்.	:	80
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	184 / 2003
4.	பொருள்	:	மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி தொடங்கப்படுவது குறித்து
5.	2003–2004–ம் ஆண்டிற்கான கல்வித்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் ... ரூ.698.28 இலட்சம் செலவில் 200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்படும்
8.	துறையின் பதில்	:	2003–04–ஆம் ஆண்டில் 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினியியல் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது அரசாணை (நிலை) எண்.30 பள்ளிக் கல்வி நாள் 26.02.2004)
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாட்டில் எல்லையோர பள்ளிகளில் தமிழ் பாடம் ஒரு மொழிப்பாடமாக கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பது குறித்து

1.	வரிசை எண்.	:	81
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	388 / 2003
4.	பொருள்	:	தமிழ்நாட்டில் எல்லையோர பள்ளிகளில் தமிழ் பாடம் ஒரு மொழிப்பாடமாக கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பது குறித்து
5.	2003–2004–ம் ஆண்டுக்கான போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை	:	
	நாள்	:	28.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் ... இனிமேல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப்பாடம் ஆக்கப்படும்
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் எல்லையோரமுள்ள அனைத்து பள்ளிகளிலும் தமிழ்பாடம் ஒரு மொழிப்பாடமாக கற்பிக்கப்பட்டு வருகிறது. தமிழ் மொழிப்பாடம் இல்லாத ஒருசில பள்ளிகளில் மொழிப்பாடம் துவங்குவதற்கு அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான சட்டம் இயற்றப்பட்டு தற்போது முதல் வகுப்பு முதல் படிப்படியாக தமிழ் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்திலுள்ள படிக்காத கிராமப்புற இளைஞர்களுக்கு கல்வியறிவு ஏற்படுத்த இரவு நேர கல்விச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பது குறித்து

1.	வரிசை எண்.	:	82
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	704 / 2003
4.	பொருள்	:	தமிழகத்திலுள்ள படிக்காத கிராமப்புற இளைஞர்களுக்கு கல்வியறிவு ஏற்படுத்த இரவு நேர கல்விச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பது குறித்து
5.	உடுக்குறியிடாத வினா	:	26804
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஜி.கே. மணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் ... நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டவுடன் மையங்கள் தொடங்கப்பட்டு எழுத்தறிவு அற்றவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தரப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் வளர்கல்வித் திட்டம் மைய அரசின் 100% நிதியுதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் 1475 தலைமை வளர்கல்வி மையங்கள் மற்றும் 12632 வளர்கல்வி மையங்கள் ஆக மொத்தம் 14107 மையங்களில் மாலை நேரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 15–35 வயது பிரிவைச் சார்ந்த எழுத்தறிவற்றவர்கள் பயன் பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் இதுவரை 28.34 இலட்சம் ஆண்களும், 37.24 இலட்சம் பெண்களும் ஆக மொத்தம் 55.58 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஆசிரியர்கள் பணி இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து

1.	வரிசை எண்.	:	83
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	32 / 2004
4.	பொருள்	:	தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஆசிரியர்கள் பணி இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து
5.	ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்	:	
	நாள்	:	09.02.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஜி. பழனிச்சாமி, திரு.கே.என். லட்சுமணன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.செ. செம்மலை, கல்வி அமைச்சர் ... 5638 ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுத்து வருகின்றோம். இப்போது அந்தப் பணி துவங்கப்பட்டுவிட்டது. அதேபோல மேல்நிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 6362 ஆசிரியர்களை நியமிப்பதற்கு உத்தரவிட்டு அந்தப் பணியும் இப்போது தேர்வு வாரியத்தின் மூலமாக நடந்து வருகிறது. இன்னும் ஒரிரு மாதங்களில் இந்த 12,000 ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிடும்.
8.	துறையின் பதில்	:	2004-2005 ஆம் ஆண்டில் அனைத்து ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்தில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் நிலை குறித்து

1.	வரிசை எண்.	:	84
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	109 / 2005
4.	பொருள்	:	தமிழகத்தில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் நிலை குறித்து
5.	2005–2006–ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம்	:	
	நாள்	:	07.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ப. அரசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சர்
			... மீதியுள்ள 9333 பணியிடங்கள் இன்னும் ஒரு மாதத்தில் நிரப்பப்படும்.
8.	துறையின் பதில்	:	மேற்காண் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பெண்கள் எழுத்தறிவு விகிதம் மிகவும் குறைவாக காணப்படும் வட்டாரங்களில் சிறப்பு மகளிர் எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்துவது குறித்து

1.	வரிசை எண்.	:	85
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	402 / 2005
4.	பொருள்	:	பெண்கள் எழுத்தறிவு விகிதம் மிகவும் குறைவாக காணப்படும் வட்டாரங்களில் சிறப்பு மகளிர் எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்துவது குறித்து
5.	2005–2006–ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை, மானியக் கோரிக்கையின் மீது விவாதம்	:	
	நாள்	:	07.04.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் ... சிறப்பு மகளிர் எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள வட்டாரங்கள் கண்டறியப்பட்டு, அங்குள்ள எழுத்தறிவற்ற மகளிருக்கு மாநில அரசின் நிதி உதவியுடன் மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களில் மாநில சராசரி எழுத்தறிவு விகிதத்தைவிட குறைவாக உள்ள மகளிர் எழுத்தறிவில் பின்தங்கிய 17 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு விடுபட்ட எழுத்தறிவற்ற மகளிருக்கான எழுத்தறிவுத் திட்டம் (Project for Residual illteracy) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மைய/மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி வழங்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

நூலகங்களில் வாங்குகின்ற நூல் பிரதிகள் குறைந்தபட்சம் 1,500 படிகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	86
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	184 / 2006
4.	பொருள்	:	நூலகங்களில் வாங்குகின்ற நூல் பிரதிகள் குறைந்தபட்சம் 1,500 படிகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து
5.	ஆளுநர் பேரூரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	30.05.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் ... இனிமேல் 750 படிகள் வாங்குவதற்கு பதிலாக குறைந்தபட்சம் 1000 படிகள் வாங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை (நிலை) எண்.103, பள்ளிக் கல்வித் துறை, நாள்:03.07.2006–இல் நூலக ஆணைக்குழுவின் நிதி நிலைக்கேற்ப வாசகர்களின் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நூல் தேர்வுக்குழு தேர்வுசெய்யும் தமிழ் நூல்களை இனிமேல் 1000 படிகள் பொது நூலகங்களுக்கு வாங்க பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழ் வழியிலே கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்துவது குறித்து

1.	வரிசை எண்.	:	87
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	186/2006
4.	பொருள்	:	தமிழ் வழியிலே கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்துவது குறித்து
5.	ஆளுநர் பேரூரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	30.05.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் ... அரசு மான்யம் பெறாத பள்ளிகளில் பயிலுகின்ற எல்லா மாணவ, மாணவியருக்கும் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ் வழியிலே கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் (1 முதல் 12–ஆம் வகுப்புகள் வரை) இலவச பாடப்புத்தகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டுமென்று காத்திருக்கக் கூடிய மாணவர்களிலே முழுத் தகுதி படைத்த 1,134 பேருக்கு வாய்ப்பு வழங்குவது குறித்து

1.	வரிசை எண்.	:	88
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	274 / 2006
4.	பொருள்	:	இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மீண்டும் அனுமதிக்கப்பட வேண்டுமென்று காத்திருக்கக் கூடிய மாணவர்களிலே முழுத் தகுதி படைத்த 1,134 பேருக்கு வாய்ப்பு வழங்குவது குறித்து
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... வாய்ப்பு வழங்கி அவர்களுக்கு அனுமதி வழங்கும்.
8.	துறையின் பதில்	:	உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளினால் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான இரண்டாண்டு பயிற்சி, மூன்றாம் மற்றும் இறுதி கட்டமாக தகுதி வாய்ந்த 710 மாணவர்களுக்கு சேர்க்கை அளிக்கப்பட்டு 30.12.2006 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தகுதி படைத்த அனைவருக்கும் சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 23,495 பேர் பயன் அடைந்துள்ளனர்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணியாற்றக்கூடிய வட்டார வள மைய ஆசிரியர்களை பணிமூப்பின் அடிப்படையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு மாற்றம் செய்வது குறித்து

1.	வரிசை எண்.	:	89
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	276 / 2006
4.	பொருள்	:	அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணியாற்றக்கூடிய வட்டார வள மைய ஆசிரியர்களை பணிமூப்பின் அடிப்படையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு மாற்றம் செய்வது குறித்து
5.	2006–2007–ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களில் மாற்றம் செய்ய ஆணையிடவுள்ளது
8.	துறையின் பதில்	:	2005–2006–ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் வட்டார வள மையங்களில் பணிபுரியும் 500 ஆசிரியர் பயிற்றுநர்களை பணிமூப்பு அடிப்படையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாறுதல் செய்ய அரசாணை (நிலை) எண்.158 பள்ளி கல்வித் துறை, நாள்: 07.09.2006–இல் ஆணையிடப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

10–கே. புராஜெக்ட் என்ற திட்டத்தின் அடிப்படையில் தொடக்கக் கல்விகளுக்கு மாத்திரம் இந்த ஆண்டு 10,000 கணினிகள் தொடக்கக் கல்வியினுடைய கணினி மேம்பாட்டிற்காக வழங்கப்படுவது குறித்து

1.	வரிசை எண்.	:	90
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	278 / 2006
4.	பொருள்	:	10–கே. புராஜெக்ட் என்ற திட்டத்தின் அடிப்படையில் தொடக்கக் கல்விகளுக்கு மாத்திரம் இந்த ஆண்டு 10,000 கணினிகள் தொடக்கக் கல்வியினுடைய கணினி மேம்பாட்டிற்காக வழங்கப்படுவது குறித்து
5.	2006–2007–ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... கணினி மேம்பாட்டிற்காக வழங்கப்படும்
8.	துறையின் பதில்	:	அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலமாக தொடக்கக் கல்விக்கு கணினி வழிக்கல்வி மற்றும் உபகரணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.12.26 கோடியாகும். 2006–2007–ஆம் ஆண்டில், 5,200 கணினிகள் கொள்முதல் செய்ய கொள்முதல் ஆணை எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மீதம் தேவையான கணினிகளை அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் பெற்று வழங்க உத்தேசிக்கப்பட்டு வரும் நிதியாண்டில் (2007–08) மத்திய அரசின் ஒப்புதலும், நிதி ஒதுக்கீடும் பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அங்கீகாரம் பெற்று அரசு உதவி பெறாமல் நடந்து வருகின்ற பள்ளிகளுக்கு பணியிடங்கள் வழங்குவது குறித்து

1.	வரிசை எண்.	:	91
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	283 / 2006
4.	பொருள்	:	அங்கீகாரம் பெற்று அரசு உதவி பெறாமல் நடந்து வருகின்ற பள்ளிகளுக்கு பணியிடங்கள் வழங்குவது குறித்து
5.	2006–2007–ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. பீட்டர் அல்போன்ஸ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... அரசினுடைய நிதி நிலமையையும் நாங்கள் கருத்தில் கொண்டு இதற்கு அரசு ஆவன செய்யும்; பரிசீலிக்கும்.
8.	துறையின் பதில்	:	1991–1992–ம் கல்வியாண்டிற்குப் பிறகு துவக்கப்படும் தனியார் பள்ளிகள் / பாடப்பிரிவுகளுக்கு எவ்விதமான மானியமும் வழங்கப்படமாட்டாது என அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு அம்முடிவிற்கிணங்க தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1973 பிரிவு 14 A- யில் சட்டத்திருத்தமும் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1991–1992–க்குப் பிறகு இனி எப்போதும் நிதியுதவி வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் அங்கீகாரம் வழங்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி மானியம் அனுமதிக்க இயலாத நிலை உள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

1991–க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட 347 பள்ளிகளில் 15 ஆண்டு காலமாக ஊதியமின்றி வாடுகின்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து

1.	வரிசை எண்.	:	92
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	461 / 2006
4.	பொருள்	:	1991–க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட 347 பள்ளிகளில் 15 ஆண்டு காலமாக ஊதியமின்றி வாடுகின்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	1159
	துணை வினா		
	நாள்	:	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. மு. அப்பாவு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
			... அரசுக்கு இது குறித்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, வருங்காலங்களிலே நிதி ஆதாரங்களைப் பொறுத்து. இது குறித்து அரசு ஆலோசிக்கும்.
8.	துறையின் பதில்	:	1991–1992–ம் கல்வியாண்டிற்குப் பிறகு துவக்கப்படும் / தாமுயர்த்தப்படும் தனியார் பள்ளிகள் / பாடப்பிரிவுகளுக்கு எவ்விதமான மானியமும் வழங்கப்படமாட்டாது என அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு அம்முடிவிற்கிணங்க தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1973 பிரிவு 14 A-யில் சட்டத்திருத்தமும் செய்யப்பட்டுள்ளது.இந்நிலையில், 1991–1992–க்குப் பிறகு இனி எப்போதும் நிதியுதவி வழங்கப்பட்டமாட்டாது என்ற நிபந்தனையுடன் அங்கீகாரம் வழங்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி மானியம் அனுமதிக்க இயலாத நிலை உள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நடப்பாண்டில் துவக்கப்படும் ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கையினை மாவட்ட வாரியாக அறிவிப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	93
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1023 / 2006
4.	பொருள்	:	நடப்பாண்டில் துவக்கப்படும் ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கையினை மாவட்ட வாரியாக அறிவிப்பது குறித்து
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	2243
	நாள்	:	25.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கி. ஆறுமுகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
			... நிலை உயர்த்த விழையும் கருத்துரு அதன் பரிசீலனையில் உள்ளது
8.	துறையின் பதில்	:	அனைவருக்கும் கல்வி இயக்கம் என்ற மைய அரசின் திட்டத்தில், கல்வி காப்புறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் 126 கல்வி காப்புறுதி மையங்கள் 2006-2007-ஆம் கல்வியாண்டில் 1-5 வகுப்பு கொண்ட முறையான் தொடக்கப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டு, அரசாணை (நிலை) எண்.170, பள்ளிக் கல்வி, நாள்:13.09.2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மாணவ, மாணவிகள் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும் நியுரோ சயின்ஸ் வழிமுறைகளைப் பயன்படுத்தி நவீன கல்வியைப் போதிப்பது குறித்து புதிய திட்டம் கொண்டு வருதல் குறித்து

1.	வரிசை எண்.	:	94
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1203 / 2006
4.	பொருள்	:	மாணவ, மாணவிகள் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும் நியுரோ சயின்ஸ் வழிமுறைகளைப் பயன்படுத்தி நவீன கல்வியைப் போதிப்பது குறித்து புதிய திட்டம் கொண்டு வருதல் குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	1674
	நாள்	:	31.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. ப. ரங்கநாதன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
			... ஆய்வில் உள்ளது
8.	துறையின் பதில்	:	வளர்ந்து வரும் சூழ்நிலைகளுக்கேற்ப புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றி வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை (Teaching, Learning Process) அமைக்க வேண்டியது அவசியமாகும். இதன் தொடர்ச்சியாக செயல் வழிக் கற்றல் முறை (Activity Based Learning) பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உடல் அளவிலும், மன அளவிலும் பாதிப்பை ஏற்படுத்தும் எத்தகைய தண்டனையையும் வழங்கக் கூடாது என்ற அரசின் ஆணைக்கேற்ப, குழந்தைகளை தக்கமுறையில் கையாள ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பணியாற்றும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் குழந்தை வளர்ச்சி பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி குழந்தைகளின் உடல் வளர்ச்சி (Physical Development) மன வளர்ச்சி (Mental Development) மற்றும் (related issues) அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்கும். ஒருகிணைந்த குழந்தை வளர்ப்பு திட்டத்துடன் இணைந்து சிறந்த வல்லுநர்களை கொண்டு இந்த பயிற்சி வழங்கப்பட

உள்ளது. இப்பயிற்சிக்கென ரூ.2.50 கோடி செலவிடப்படவுள்ளது கற்பித்தலால் பயன்படும் நியூரோ சயின்ஸ் குறித்து கலை திட்டம் (Curriculam) தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பாடத்திட்டம் (Syllabus) உருவாக்க பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 31.10.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பள்ளிகளுக்கு பெஞ்ச், டெஸ்குகளை வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து

1.	வரிசை எண்.	:	95
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	93 / 2007
4.	பொருள்	:	பள்ளிகளுக்கு பெஞ்ச், டெஸ்குகளை வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம்	:	1674
	நாள்	:	26.03.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. என்.ஆர். ரங்கராஜன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்குவதற்கு இப்போது நபார்டு வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். விரைவிலேயே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான ஆணையை பிறப்பிப்பார்கள்.
8.	துறையின் பதில்	:	இம்மாநிலத்தில் சென்னையைத் தவிர ஏனைய 29 மாவட்டங்களில் உள்ள 1530 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் பகுதி I முதல் பகுதி VII வரை கட்டப்பட்ட மற்றும் கட்டப்படவுள்ள 15,345 கூடுதல் வகுப்பறைகளில் மாணவர்களுக்கான 1,90,140 இருக்கை வசதிகளும் (பெஞ்சு, டெஸ்குகளும்) ஆசிரியர்களுக்கு 15,845 மேசை, நாற்காலிகளும், ரூ.69,10,92,000/– செலவில் ஏற்படுத்திட அரசாணை (நிலை) எண்.75, பள்ளிக் கல்வி, நாள்: 26.03.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. டான்சி நிறுவனத்தின் மூலம் அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்கு மேற்கண்ட இருக்கை வசதிகளை வழங்குவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

ஊர்ப்புற நூலகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் இடம் மாறுதல் பெறுவதில் இடர்பாடுகள் உள்ளது குறித்து

1.	வரிசை எண்.	:	96
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	251 / 2007
4.	பொருள்	:	ஊர்ப்புற நூலகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் இடம் மாறுதல் பெறுவதில் இடர்பாடுகள் உள்ளது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	7460
	நாள்	:	04.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி பி. பத்மாவதி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... அத்தகைய இடர்பாடுகள் இருக்குமானால் அரசு அவற்றை நிச்சயமாக பரிவோடு கவனித்து அவற்றை ஆவன செய்ய முயற்சிக்கும்
8.	துறையின் பதில்	:	பொது நூலகத்துறையில் ஊர்ப்புற நூலகர்களாகப் பணிபுரிபவர்களை அவர்களது விருப்பத்தின் பேரில் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மாறுதல் செய்ய அரசாணை (நிலை) எண்.156, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.09.1998–க்கு திருத்தம் வேண்டி பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசாணை வெளியானதும் மாறுதல் கோரி விண்ணப்பித்த ஊர்ப்புற நூலகர்களுக்கு இடம் மாறுதல் பெறுவதில் உள்ள இடர்பாடுகள் நீங்கிவிடும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கிராமங்களிலே இருக்கின்ற நூலகங்களிலே ஈ–ப்ரெஸிங் சென்டர்ஸ் கம்பியூட்டர் பிரெளஸிங் சென்டர்ஸ் துவங்குவது குறித்து

1.	வரிசை எண்.	:	97
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	252 / 2007
4.	பொருள்	:	கிராமங்களிலே இருக்கின்ற நூலகங்களிலே ஈ–ப்ரெஸிங் சென்டர்ஸ் கம்பியூட்டர் பிரெளஸிங் சென்டர்ஸ் துவங்குவது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	7460
	துணை வினா		
	நாள்	:	04.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
			... மாவட்ட நூலகங்களிலே முதற்கட்டமாக இந்த Internet Browsing Centres நூலகங்களை உருவாக்கக் கூடிய வசதியும், அதைத் தொடர்ந்து கிளை நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்களும் உருவாக்கக்கூடிய ஒரு முயற்சியை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.
8.	துறையின் பதில்	:	முதல் கட்டமாக தற்போதுள்ள 30 மாவட்ட மைய நூலகங்களில் இன்டர்நெட் பிரெளசிங் ஏற்படுத்தப்பட்டு வாசகர்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. அடுத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 100 கிளை நூலகங்களில் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது போன்று வருங்காலங்களில் கிளை/ஊர்ப்புற நூலகங்களிலும் அவற்றை ஏற்படுத்த தொடர் முயற்சி மேற்கொள்ளப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கல்வி வளர்ச்சியிலே பின்தங்கி இருக்கக்கூடிய வட மாவட்டங்களிலே கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	98
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	376 / 2007
4.	பொருள்	:	கல்வி வளர்ச்சியிலே பின்தங்கி இருக்கக்கூடிய வட மாவட்டங்களிலே கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது குறித்து
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம்	:	7460
	நாள்	:	09.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... கல்வி வளர்ச்சிக்காக ரூ.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது
8.	துறையின் பதில்	:	2007–2008–ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின்கீழ், அரசாணை (1டி) எண்.173, பள்ளிக் கல்வித் துறை நாள்: 25.05.2007–இல் கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர், சேலம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் மாணவர்கள் குறைவான சதவீதத்தில் தேர்ச்சி பெற்ற அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைக் கண்டறிந்து அப்பள்ளிகளில் பயிலும் 10–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளி நேரம் முடிந்த பிறகு சிறப்பு வகுப்புகள் நடத்தி பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறச் செய்ய பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி இத்திட்டத்திற்காக ரூ.1,22,80,000/– ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கிராமப்புறங்களிலே நூலக வசதியினை பெருக்கும் பொருட்டு பகுதிநேர நூலகங்களை தரம் உயர்த்தப்படுவது குறித்து

1.	வரிசை எண்.	:	99
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	379 / 2007
4.	பொருள்	:	கிராமப்புறங்களிலே நூலக வசதியினை பெருக்கும் பொருட்டு பகுதிநேர நூலகங்களை தரம் உயர்த்தப்படுவது குறித்து
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம்	:	
	நாள்	:	09.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... 166 பகுதி நேர நூலகங்களை தரம் உயர்த்தியும் புதிதாக 189 நூலகங்களை தோற்றுவித்தும் 335 ஊர்ப்புற நூலகங்கள் (Village Library) திறக்கப்படும். இதற்காக ரூ.1.34 கோடி நூலக நிதியிலிருந்து செலவழிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இதனை நடைமுறைப்படுத்திட, அரசாணை (நிலை) எண்.186, பள்ளிக்கல்வித் (கே1) துறை, நாள்:26.07.2007-ல் ஆணை வழங்கப்பட்டு, அந்தந்த மாவட்ட நூலக அலுவலர்களால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

வாசகர்களின் பயன்பாட்டிற்காக கணினிகளின் எண்ணிக்கையை அதிகரித்து தனி இணைய வலைப்பிரிவு ஏற்படுத்துவது குறித்து

1.	வரிசை எண்.	:	100
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	380 / 2007
4.	பொருள்	:	வாசகர்களின் பயன்பாட்டிற்காக கணினிகளின் எண்ணிக்கையை அதிகரித்து தனி இணைய வலைப்பிரிவு ஏற்படுத்துவது குறித்து
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம்	:	
	நாள்	:	09.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்காக கணினிகளின் எண்ணிக்கையை அதிகரித்து தனி இணைய வலைப்பிரிவு (Internet Browsing Centre) நிச்சயமாக ஏற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	30 மாவட்ட மைய நூலகங்களிலும், வாசகர்களின் பயன்பாட்டிற்காக கணினிகளின் எண்ணிக்கையை மூன்று முதல் ஐந்து வரை அதிகரித்து இணைய வலைப்பிரிவு (Internet Browsing Centre) இதனை விரைவில் முடிக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

1980–ஆம் ஆண்டிலே இருந்து ஆசிரியர் சேமிப்பு நிதி குறித்து T.P.F. கணக்கே இல்லை. அவர்களுக்கு வட்டியும் கொடுக்கப்படுவதில்லை என்ற குறையை நிவர்த்தி செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	101
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	381 / 2007
4.	பொருள்	:	1980–ஆம் ஆண்டிலே இருந்து ஆசிரியர் சேமிப்பு நிதி குறித்து T.P.F. கணக்கே இல்லை. அவர்களுக்கு வட்டியும் கொடுக்கப்படுவதில்லை என்ற குறையை நிவர்த்தி செய்வது குறித்து.
5.	2007–2008–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதம்	:	
	நாள்	:	09.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... எந்த அளவிற்கு தொடக்கக் கல்வி அலுவலகங்களிலே முறைப்படுத்தி, சீர்படுத்தி அங்கே புதிய Accountant–களை வைத்து இந்த முறையை முழுமையாக செய்வதற்கு அரசு முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளும்.
8.	துறையின் பதில்	:	அரசு பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு முறையே அவர்களின் பொது வைப்பு நிதி (GPF) மற்றும் ஆசிரியர் சேமநல நிதி (TPF) கணக்கு முடித்து அசல் மற்றும் வட்டி தொகை அவரவர் பணி ஓய்வு பெற்றவுடன் சரியான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மேல்நிலைப் பள்ளியில் எம்.பில். முடித்தவர்களுக்கு போதுமான ஊதியம் தரப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	102
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	612 / 2007
4.	பொருள்	:	மேல்நிலைப் பள்ளியில் எம்.பில். முடித்தவர்களுக்கு போதுமான ஊதியம் தரப்படுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	532
	நாள்	:	19.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி மு. சந்திரா
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... நிதிநிலைக்கேற்ப அரசு உரிய வகையிலே ஆய்வு செய்யும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை (நிலை) எண்.1170, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள்:20.12.1993–ல் 01.03.1993 அன்று முதுகலை ஆசிரியர்கள் எம்.பில்../பி.எச்.டி../பி.ஜி../டி.ட்டி.ஈ., போன்ற உயர்கல்வித் தகுதி பெற்றிருப்பின் ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என்றும் எதிர்காலத்தில் இச்சலுகை நீட்டிக்கப்பட மாட்டாது என்றும் ஆணை வெளியிடப்பட்டது. பின்னர் 01.03.1993–க்குப் பின்னர் இதுபோன்ற உயர்கல்வித் தகுதி பெற்றவர்களுக்கும் ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாமென்று முடிவெடுக்கப்பட்டது. அதற்கேற்ப அரசாணை (நிலை) எண்.194, பள்ளிக் கல்வி, நாள்: 10.10.2006–ல் 01.03.1993 அன்று எம்.பில../பி.எச்.டி../பி.ஜி../டி.ட்டி.ஈ., போன்ற உயர்கல்வித் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ள நிலையினை மாற்றி அனைத்து முதுகலை ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் அரசாணை (நிலை) எண்.1170, கல்வி அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை, நாள்:20.12.1993–க்கு தக்க திருத்தம் வழங்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்தில் வேலையில்லாத வேளாண்மை பட்டதாரிகளை பள்ளிகளில் வேளாண்மை ஆசிரியர்களாக நியமிக்க அரசு முன்வருவது குறித்து.

1.	வரிசை எண்.	:	103
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	774 / 2007
4.	பொருள்	:	தமிழகத்தில் வேலையில்லாத வேளாண்மை பட்டதாரிகளை பள்ளிகளில் வேளாண்மை ஆசிரியர்களாக நியமிக்க அரசு முன்வருவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	91
	நாள்	:	25.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. நா. இராமகிருஷ்ணன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... படிப்படியாக கொண்டு வருவதற்கு அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.
8.	துறையின் பதில்	:	1999–2000 கல்வி ஆண்டில் தமிழகத்தில் உள்ள 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மை தொழிற் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு 2007–2008–ஆம் கல்வி ஆண்டில் தகுதி பெற்ற வேளாண் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து வேளாண்மைப் பாடத்தை மேலும் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தி அரசாணை (நிலை) எண்.63, பள்ளிக் கல்வித் துறை, நாள்:13.03.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது மேலும் 100 பள்ளிகளில் வேளாண்மை தொழிற்கல்வியை அறிமுகப்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் இலவச மிதிவண்டியை தனது தொகுதியில் 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படாதது குறித்து.

1.	வரிசை எண்.	:	104
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1024 / 2007
4.	பொருள்	:	பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படும் இலவச மிதிவண்டியை தனது தொகுதியில் 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படாதது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	20591
	நாள்	:	07.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கு. செல்வம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... நிச்சயமாக அந்தப் பணி விரைவாக நிறைவேற்றப்படும்.
8.	துறையின் பதில்	:	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் விடுபட்டுபோன மாணவ / மாணவிகளுக்கு மிதி வண்டிகளை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய கருத்துக்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்குநருக்கு அனுப்பும்படி கடலூர் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

இணைப்பு – 2

குழுவின் பரிந்துரை

கிராமப்புறங்களில் அரசு பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு அனைத்து பள்ளிகளிலும் இருக்கை வசதி ஏற்படுத்தி கொடுப்பது குறித்து

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	பள்ளிக்கல்வித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	531 / 2006
4.	பொருள்	:	கிராமப்புறங்களில் அரசு பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு அனைத்து பள்ளிகளிலும் இருக்கை வசதி ஏற்படுத்தி கொடுப்பது குறித்து
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	510
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. எஸ். ஜெயபால்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ... அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்
8.	துறையின் பதில்	:	இம்மாநிலத்தில் சென்னையைத் தவிர ஏனைய 29 மாவட்டங்களில் உள்ள 1530 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் பகுதி I முதல் பகுதி VII வரை கட்டப்பட்ட மற்றும் கட்டப்படவுள்ள 15,845 கூடுதல் வகுப்பறைகளில் மாணவர்களுக்கான 1,90,140 இருக்கை வசதிகளும் (பெஞ்சு, டெஸ்குகளும்) ஆசிரியர்களுக்கு 15,945 மேசை, நாற்காலிகளும் ரூ.69,10,92,000/– செலவில் ஏற்படுத்தி அரசாணை (நிலை) எண்.75, பள்ளிக் கல்வி, நாள்: 26.03.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	31.10.2007
10.	குழுவின் பரிந்துரை	:	கட்டிட வசதிகள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சில பள்ளிகளில் மேசை, நாற்காலிகள் இல்லாத நிலை உள்ளது. அதேபோல் மின்விசிறி கொடுக்கப்படவில்லை. அதனால் மாணவர்கள் மிகவும் கஷ்டப்படும் நிலை உளளது. ஆகவே அந்த வசதிகளைச் செய்து தர வேண்டும். ஆகவே அவைகளையெல்லாம் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 3

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

17.8.2006	சென்னை
1.9.2006	சென்னை
5.12.2006	சென்னை
12.12.2006 & 13.12.2006	மதுரை திண்டுக்கல்
2.1.2007 முதல் 11.1.2007 வரை	வடமாநிலங்களில் ஆய்வுப்பயணம் அந்தமான்–நிக்கோபர், கொல்கத்தா, புதுதில்லி, ஆக்ரா, அமிர்தசரஸ் மற்றும் மும்பை
9.4.2007	சென்னை
23.4.2007	சென்னை
13.6.2007	சென்னை
12.7.2007 13.7.2007	கோயம்புத்தூர்
14.7.2007	நீலகிரி
2.8.2007 3.8.2007	சென்னை
16.8.2007 17.8.2007 18.8.2007	காஞ்சிபுரம் விழுப்புரம் கடலூர்
6.9.2007 7.9.2007	சென்னை
27.9.2007 28.9.2007	வேலூர்
29.9.2007	திருவண்ணாமலை
27.10.2007	சென்னை
30.10.2007 31.10.2007	சென்னை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து இரண்டாவது அறிக்கை

பிழை திருத்தப் பட்டியல்

பக்கம்	வரிசை எண்	வரி எண்	பிழை	திருத்தம்
18	8	3	வாரிதார்களுக்கு	வாரிசுதாரர்களுக்கு
55	8	3	அலுவலங்கள்	அவலங்கள்
59	தலைப்பு	2	நகரங்களில்	நகரப் பேருந்துகளில்
59	4	3	நகரங்களில்	நகரப் பேருந்துகளில்
67	8	4(பத்தி 3)	புள்ளியின்	பள்ளியின்
73	8	3	கட்டுமானக்	கட்டுமானப்
137	இணைப்பு–3	22	27.10.2007	18.10.2007


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS